# இஸ்லாம் ஒரு பார்வை



لمحة مختصرة عن الإسلام

لجنة التعريف بالإسلام
ISLAM PRESENTATION COMMITTEE
جمعية النجاة الخيرية

தனிப்பட்ட வாழ்வில் மட்டுமே ஆட்சி செலுத்துகின்ற கருத்தோட்டத்தை இஸ்லாம் முழுமையாக நிராகரித்துவிடுகின்றது. ஆன்மாவைத் தூய்மைப்படுத்தி, சமூகத்தை சீர்திருத்துவதும் அதன் புத்தமைப்புக்கு வழிவகுப்பதும்தான் தனது தலையாய குறிக்கோளாக இஸ்லாம் தெளிவாக எடுத்துரைக்கின்றது.

திருக் குர்ஆன் இயம்புகின்றது:-

*நாம் நம் தூதர்களைத் தெளிவான சான்றுகளுடனும், வழிகாட்டுதல்களுடனும் அனுப்பினோம்; மேலும், அத்துடன் அவர்களுக்கு வேதத்தையும், துலாக்கோலையும் இறக்கினோம். மக்கள் நீதியில் நிலைத்திருக்கும் பொருட்டு! மேலும்,இரும்பையும் இறக்கினோம்; அதில் பெரும் வலிமை உள்ளது. மக்களுக்குப் பயன்களும் இருக்கின்றன. (இவ்வாறெல்லாம் செய்யப்பட்டது எதற்காகவெனில்) அல்லாஹ்வைப் பார்க்காமலே அவனுக்கும் அவனுடைய தூதர்களுக்கும் உதவி செய்பவர்கள் யார் என்பதை அல்லாஹ் கண்டறிவதர்காகத்தான்! திண்ணமாக அல்லாஹ் பேராற்றல் கொண்டவனாகவும், வலிமை மிக்கவனாகவும் இருக்கின்றான்.*

*திருக்குர்ஆன் 57:25*

இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உங்களில் ஒவ்வொருவரும் தனக்குக் கீழுள்ளவர்களைப் பாதுகாக்கும் பொறுப்பாளராவீர். அவர்களின் நலன்களைப் பற்றி நீங்கள் விசாரிக்கப்படுவீர்கள். ஆகவே, நாட்டின் தலைவர், தன் நாட்டு மக்களின் நலன்களைப் பற்றி விசாரிக்கப்படுவார்.

ஓவ்வொரு மனிதனும் தன் குடும்பத்தாருக்கு மேய்ப்பாளனாவான். எனவே, குடும்பத்தின் ஒவ்வோர் உறுப்பினருடைய நலன் பற்றியும் கேள்வி கேட்கப்படுவான். ஓவ்வொரு பெண்ணும் தன் கணவனுடைய குடும்பத்தின் பொறுப்பாளியாவாள்; எனவே, அக்குடும்பத்தின் ஒவ்வொருவரின் நலன் பற்றியும் கேள்வி-கணக்கு கேட்கப்படுவாள். மேலும், ஒவ்வொரு பணியாளனும் தன் எஜமானனுக்குப் பாதுகாப்பாளனாவான். எனவே, அவன் தன் எஜமானனின் சொத்தை (எப்படி பாதுகாத்தான் என்பது) பற்றி விசாரணை செய்யப்படுவான்.

மேற்சொன்ன இஸ்லாமிய அறிவுரைகளை மேலோட்டமாகப் பார்த்தாலே அது வாழ்வின் அனைத்துத் துறைகளையும் தழுவிய ஒரு வாழ்க்கை நெறி என்பது புலப்படும். மேலும், தீயசக்திகள் அனைத்தையும் அடக்கியாளும் வகையில் மனிதவாழ்வின் எந்தவொரு துறையையும் அது விட்டு வைக்கவில்லை என்பதையும் நீங்கள் தெரிந்து கொள்ளலாம்!

## தனிவாழ்வுக்கும் பொதுவாழ்வுக்கும் இடையே சமநிலை உருவாக்குதல்

இஸ்லாம் இறைவனால் வழங்கப்பட்ட வாழ்க்கைநெறியாகத் திகழ்வதால், அது தனிநபர் வாழ்வுக்கும் கூட்டு வாழ்வுக்கும் இடையே சமநிலையை மிகவும் ஆக்கபூர்வமான முறையில் - மிகுந்த பயனளிக்கும் விதத்தில் நிலைநாட்டுகின்றது. அது மனித ஆளுமையில் தனிப்பட்ட முறையில் நம்பிக்கை வைத்திருக்கின்றது. மனிதர்கள் அனைவரையும் தனிப்பட்ட முறையில் தமது செயல்களுக்குப் பொறுப்பாளர்களாகவும் இறைவன் முன் பதில் சொல்லக் கடமைப்பட்டவர்களாகவும் கருதுகின்றது.

இஸ்லாம் தனிமனிதனின் அடிப்படை உரிமைகளுக்கு உத்தரவாதமளிக்கின்றது. அவற்றைத் தடை செய்யவும் பறித்திடவும் எவரையும் அது அனுமதிப்பதில்லை. மனித ஆளுமையின் வளர்ச்சியை அது தனது கொள்கையின் தலையாய குறிக்கோளாகக் கொண்டுள்ளது. சமூகத்தில் அல்லது அரசில் மனிதன் தன்ஆளுமையை இழந்திட வேண்டும் என்பதை அது ஏற்றுக்கொள்வதில்லை. அதேவேளை மனிதனுள் பொறுப்புணர்வை அது தோற்றுவிக்கின்றது. மனிதர்களை ஒரு சமூகத்தினுள்ளும் அரசினுள்ளும் ஒன்றுதிரட்டி அமைப்பு ரீதியாகக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருகின்றது. சமூக நன்மைக்குத் தமது பங்களிப்பை ஆற்றும்படி தனிமனிதனுக்கு அது கட்டளையிடுகின்றது.

இஸ்லாத்தில் தொழுகை கூட்டாக நிறைவேற்றப்படுகின்றது. அது முஸ்லிம்களிடையே சமூக ஒழுங்கையும் கட்டுப்பாட்டு உணர்வையும் வளர்க்கின்றது.

ரமளான் நோன்பு முஸ்லிம்கள் அனைவரும் ஒன்றாக ஒரே நேரத்தில் கடைப்பிடிக்க வேண்டிய ஒன்றாகும். இந்த அரிய ஏற்பாடு தனிநபர் மற்றும் சமுதாயத்தினுடைய நலன்களை அடைய வழிகோலுகினறது.

ஜகாத் (ஒவ்வொரு முஸ்லிமும் தனது சொத்திலிருந்து ஒரு குறிப்பிட்ட விகிதத்தை இறைவழியில் செலவழித்தல்) திட்டமிட்ட முறையில் விநியோகிக்கப்பட வேண்டும் என்பதற்காகவே அதனை கூட்டான முறையில் வழங்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளும்படி உத்தரவிடப்பட்டுள்து.

ஹஜ் கடமை அதற்கென நிர்ணயிக்கப்பட்டுள்ள காலத்தில் கூட்டாக நிறைவேற்றப்பட வேண்டுமென்று ஆணையிடப்பட்டுள்ளது.

சுருங்கக்கூறின், இஸ்லாம் தனிமனிதனையும் அலட்சியப்படுத்தவில்லை; சமூகநலன்களையும் புறக்கணிக்கவில்லை. மாறாக, இரண்டுக்கும் இடையே இணக்கமான சமநிலையை ஏற்படுத்துகின்றது.

## சர்வதேச ஒழுங்கு - மனிதாபிமானம், இஸ்லாத்தின் செய்தி!

மனிதர்கள் அனைவரையும் இன மாச்சர்யம், ஏற்றத்-தாழ்வுகள் இன்றி நோக்க வேண்டும் என சர்வதேச சமூகம் விரும்புகின்றது. எனினும், நடைமுறையில் அது இந்த உணர்வை நடைமுறைப்படுத்தும்படியான கொள்கைகளையோ, சட்டங்களையோ அதனால் உருவாக்கிட முடியவில்லை. காரணம் அவை அனைத்தும் மனிதனால் உருவாக்கபட்டவை.

ஆனால், இஸ்லாத்தின் செய்தி மனிதஇனம் முழுவதற்கும் உரியதாகும் இஸ்லாத்தின் பார்வையில் இறைவன் அனைத்துலகங்களுக்கும் அதிபதி ஆவான்! *(பார்க்க: திருக் குர்ஆன் 1:1)* அந்த ஒரே இறைவனால் அனுப்பப்பட்ட இறுதி இறைத்தூதரே முஹம்மத் (ஸல்) ஆவார்கள். இதனை திருக் குர்ஆன் இறைமொழியாக இவ்வாறு எடுத்துரைக்கின்றது:

*"மனிதர்களே! திண்ணமாக, வானங்கள் மற்றும் பூமியின் அதிபதியாகிய அல்லாஹ்வின் தூதராக நான் உங்கள் அனைவர்பாலும் அனுப்பப்பட்டுள்ளேன்!"*

*திருக்குர்ஆன் 39:9*

*"…அகிலத்தார் அனைவரையும் அச்சுறுத்தி எச்சரிக்கை செய்பவர் ஆவார்"*

*திருக்குர்ஆன் 25:1*

*"(நபியே! நாம் உம்மை உலகத்தாருக்கு அருட்கொடையாகவே அனுப்பியுள்ளோம்!"*

*திருக்குர்ஆன் 21:107*

இஸ்லாத்தின் பார்வையில் மனிதர்கள் அனைவரும் சமமானவர்கள்; அவர்களுடைய இனம், மொழி, வர்ணம், தேசியம் முதலியன எதுவாக இருந்தாலும் சரியே! இஸ்லாம் மனித இனத்தின் மனச்சான்றை முன்னிலைப்படுத்திப் பேசுகின்றது. குலப்பெருமையையோ, அந்தஸ்தையோ, செல்வத்தையோ முன்னிறுத்தவில்லை, அவற்றை தடைக்கற்களாகவும் கருதுவதில்லை. ஆனால், இத்தகைய தடைகள் உலகில் எப்போதும் இருந்து வருகின்றன என்பதை எவரும் மறுக்க முடியாது. இஸ்லாம் இந்தத் தடைகளையெல்லாம் தகர்த்தெறிந்து மனித சமூகம் அனைத்தும் இறைவனின் ஒரே குடும்பம் எனும் கருத்தோட்டத்தை அளித்தது.

இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:-

இறைவனின் படைப்புக்கள் அனைத்தும் அவனது குடும்பமே! இறைவனிடம் அதிக அன்புக்குரியவன் அவனது படைப்பினங்களை அதிகம் நேசிப்பவனே ஆவான்!

என் இறைவா! என் உயிருக்கும் அகிலத்தின் அனைத்துப் பொருள்களுக்கும் அதிபதியே! மனிதர்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் சகோதரர்களே என்று நான் உறுதிமொழி கூறுகின்றேன்.

இறைவனின் வழிமுறைகளுக்கு மதிப்பளியுங்கள்! அவனது குடும்பத்தின் (மனித இனத்தின்) மீது அன்பு செலுத்துங்கள்)

தனிப்பட்ட சகோதர பாசம், பரந்த இனவெறி எனும் குறுகிய அடிப்படையில் மட்டும் செயல்படுவதை இஸ்லாம் ஏற்றுக்கொள்வதில்லை. தம்மைச் சார்ந்தவர்களிடம் மட்டுமல்லாது அனைவரிடமும் சகிப்புத்தன்மை காட்டுவது மனிதகுலத்தின் நலனுக்கு இன்றியமையாத ஒன்றாகும். உலகின் ஒவ்வொரு பகுதிகளும் - ஒவ்வொரு மனிதனும் ஒன்றுக்கொன்று சார்ந்து நிற்கவேண்டிய சூழலில் இருக்கின்றன.

எனவே, 'வாழு, வாழவிடு' எனும் நிலைப்பாடு தவிர்க்க முடியாதது. இந்த நிலைப்பாட்டைப் பொறுத்தவரை இஸ்லாத்தின் கோட்பாடு முற்போக்கானது. அதனை ஏற்றுக்கொண்டவர்கள் எவ்வித இன, மொழி, வர்ண பேதமின்றி அனைவரும் ஒன்றே என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும் என அது கோருகின்றது. இத்தகைய ஐக்கியத்தை வலுப்படுத்த ஒரே கோட்பாட்டின் மீது கட்டியெழுப்பப்பட்ட இஸ்லாமிய நெறிகளைத் தவிர்த்து வேறு எதனால் முடியும்?

இஸ்லாம் தனது நோக்கிலும் அணுகுமுறையிலும் சர்வதேசத்தன்மை வாய்ந்ததாகும். எந்த வகையான பாகுபாடுகளையும் தடைகளையும் அது அனுமதிப்பதில்லை. மனித சமுதாயம் முழுவதையும் ஒரே குடையின் கீழ் கொணர - ஒரே கொள்கை, நெறியின் கீழ் ஒன்றுபடுத்த அது விரும்புகின்றது.

மேற்சொன்ன கருத்துக்கள் அனைத்தும் - இஸ்லாம் ஒரு முழுமையான ஒருங்கிணைந்த அனைத்துத் துறைகளையும் தழுவிய - சமநிலை தவறாத வாழ்க்கை நெறியாக விளங்குகின்றது என்பதை நிரூபிக்கின்றன.

எனவே, சத்தியத்தையும் நேர்வழியையும் அடிப்படையாகக் கொண்ட இஸ்லாத்தை அறிந்துகொள்ள மிக எளிய வழி என்னவெனில் ஒரு மனிதன் தனது இம்மை - மறுமை வாழ்வின் வெற்றியைப் பெற்றுத் தரக்கூடிய அந்த நெறியைக் குறித்து அறிந்துகொள்ள ஆர்வம் காட்ட வேண்டும். அந்த நேர்வழி தனக்குக் கிடைக்க அந்த வல்ல இறைவனிடம் பிரார்த்திக்க வேண்டும். அந்த சத்தியம் தனக்கு புலப்படும்போது அதனை ஏற்றுக்கொள்வதே வெற்றிக்கான வழியாகும்!

சத்தியம் எங்கிருந்து வருகின்றது என்பதை நோக்காமல் எவ்வித தயக்கமுமின்றி சத்தியத்துக்காக மட்டுமே அதனை ஏற்பதுதான் மனிதப் பண்பின் உச்சகட்ட சிறப்பம்சமாகும்!

دار التعريف بالإسلام
Islam Presentation
Bookshop
للمساهمة معنا في مشروع طباعة الكتب
www.ipc-kw.com 2444117 - 2427383 داخلي : 208
Fahad Salem St. Al-Mulla Saleh Mosque P.O.Box:1613 Safat 13017
Tel.: 2444117 - Fax: 2400057 e-mail:ipb@ipc-kw.com

# இஸ்லாம்

## - ஒரு பார்வை -

இன்றைய உலகில் மனிதன் தனது வாழ்வை மிகச் சரியான முறையில் சீரமைத்துக்கொள்ள இரண்டு அம்சங்கள் அவனுக்கு முக்கியமாக தேவைப்படுகின்றன:

❖பொதுவாக தனது உலக வாழ்வை நடத்திச் செல்ல தனிப்பட்ட முறையிலும், சமூக ரீதியிலும் அவனுக்குத் தேவைப்படும் உலகியல் சாதனங்கள்.

❖நீதியையும் அமைதியையும் கட்டிக் காத்திடுவதற்கு அவன் மேற்கொள்ள வேண்டிய கொள்கைகள் பற்றிய தெளிவான அறிவு —அது அவனது தனிப்பட்ட வாழ்வாக இருப்பினும் சரி , சமூக வாழ்வாக இருப்பினும் சரியே!

மனித வாழ்வுக்குத் தேவைப்படும் இவ்விரண்டையும் - உலகியல் சாதனங்களையும், கொள்கைகள் பற்றிய அறிவையும் - அவனைப் படைத்த இறைவன் நிறைவாகவே அவனுக்கு அருளியுள்ளான். அவையனைத்தும் அவன் முன் பரந்து விரிந்து கிடக்கின்றன. அவற்றை அவன் விரும்பியவண்ணம் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்

எனினும், மனிதனுடைய ஆன்மிக, சமூக மற்றும் பண்பாட்டுத் துறைகளில் தேவைப்படும் கொள்கைகளை நிறைவு செய்திடுவதற்காக இறைவன் மனித இனத்திலிருந்தே தனது திருத் தூதர்களை தேர்ந்தெடுத்தான். அவர்கள் வாயிலாக இறைவன் தனது வழிகாட்டுதலை இறைசெய்தியாக - Divine Revelation - வழங்கினான். அந்த வழிகாட்டுதல், முழுமையான ஒரு வாழ்க்கைத் திட்டமாகும். அதன் பெயரே 'இஸ்லாம்'!

'இஸ்லாம்' - இது ஓர் அரபிச்சொல்! கீழ்ப்படிதல், சரணடைதல், அடிபணிதல், சமர்ப்பித்தல் ஆகிய பொருள்களை அது குறிக்கும்! ஒரு வாழ்க்கை நெறி எனும் முறையில், ஒரே இறைவனுக்கு அடிபணிந்து, அவனுக்கு முழுமையாக கீழ்ப்படிந்து நடக்கும்படி இஸ்லாம் மனிதனுக்கு அறிவுறுத்துகின்றது. இதுவே இஸ்லாத்தின் அடிப்படை கொள்கையாகும்

இஸ்லாம் எனும் சொல்லின் மற்றொரு அகராதிப் பொருள் 'அமைதி - சாந்தி என்பதாகும். உண்மையான ஒரே இறைவனுக்கு அடிபணிந்து, அவனிடம் முழுமையாக சரணடைந்து, அவனுக்கே கீழ்ப்படிவதால் மட்டுமே ஒரு மனிதனுடைய உடலும் ஆன்மாவும் அமைதி பெற முடியும் என்பதனையே இது குறிக்கின்றது.

### இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கை

'தவ்ஹீத்' - ஏகத்துவம் என்பதே இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கையாகும். இஸ்லாம் எனும் கட்டடம் இந்த ஓரிறைக்கொள்கை எனும் அஸ்திவாரத்தின் மீதுதான் கட்டப்பட்டிருக்கின்றது! இதன் கருத்து இதுதான்:

❖இந்தப் பேரண்டம் முழுவதும் இறைவனால் படைக்கப்பட்டிருக்கின்றது. அவனே அதன் அதிபதியும், அரசனும், ஆட்சியாளனுமாவான்.

❖இறைவன் ஒருவனே! அவனது மேலாதிக்க உரிமையிலும் அவனது இறைமையிலும் எவருக்கும் பங்கில்லை. அவனுக்கு இணையோ - துணையோ எவரும், எதுவும் இல்லை.

❖இறைவனே பேரண்டத்தின் ஆட்சியாளன், பாதுகாவலன், பராமரிப்பாளன், படைப்பாளன்! மனிதனைப் படைத்ததும் இந்தப் பூமியில் அவன் வாழ்வதற்கான காலஅளவை நிர்ணயித்ததும் அவனே!

இறைவன் மனிதனுக்கு குறிப்பிட்டதொரு வாழ்க்கைநெறியை வகுத்துத் தந்துள்ளான். அந்த வாழ்க்கைநெறியை ஏற்றுக்கொள்ளவோ, நிராகரிக்கவோ சுதந்தரம் கொண்டவனாக மனிதன் இருக்கின்றான். இந்த வாழ்க்கை நெறியை ஏற்றுக் கொண்டு அதற்கு முற்றிலும் இசைவாக வாழ்க்கை நடத்துபவரே 'முஸ்லிம்' எனப்படுகின்றார். அதாவது, இறைநெறிக்குப் பணிந்து - இசைந்து வாழ்பவர். இதற்கு மாற்றமாக, இந்த வாழ்க்கைநெறியை நிராகரிப்பவர், இறைவனுக்குப் பணிந்து வாழாதவர் - இஸ்லாத்தை நிராகரிப்பவர் ஆவார்!

### ஒரு மனிதன் இஸ்லாத்தில் இணைவது எவ்வாறு?

❖வணக்கத்துக்குரிய இறைவன் அல்லாஹ் ஒருவனைத் தவிர வேறு எவரும் இல்லை; முஹம்மத் (ஸல்) அவர்கள் இறைவனின் திருத்தூதர் ஆவார்கள்!

இஸ்லாத்தின் இந்த முதல் பிரகடனத்தை மனத்தால் ஒருவர் மொழிந்து ஏற்றால், அவர் இஸ்லாத்தில் இணைந்து விடுகின்றார்.

❖இஸ்லாத்தின் இரண்டாவது அடிப்படைக் கொள்கை இறைத்தூதுத்துவம் ஆகும். அதாவது, வாழ்க்கைக்குத் தேவையான எந்த வழிகாட்டுதலையும் வழங்காமல் மனிதனை இவ்வுலகுக்கு இறைவன் அனுப்பிடவில்லை; மாறாக, அவன் அந்த வழிகாட்டுதல்களை தனது தூதர்கள் வாயிலாக வழங்கினான். தனது தூதர்கள் வரிசையில் இறுதியாக முஹம்மத் (ஸல்) அவர்களை அனுப்பி தூதுத்துவத்தை நிறைவு செய்துவிட்டான்.

இப்போது அந்த இறைத்தூதரை நம்புகின்றோம் என்பதன் பொருள் இதுவே: அவர் கொண்டு வந்த தூது சத்தியமானது என்று ஏற்றுக்கொள்கின்றோம; மேலும் அவர் கொண்டுவந்த சட்டத்தைப் பின்பற்றி வாழ்கின்றோம். அவருடைய அறிவுறுத்தலின்படியே நமது வாழ்வை அமைத்துக்கொள்கின்றோம்.

❖இந்த இரண்டாவது தூதுக்கொள்கையை ஏற்பது - அதன்படி நடப்பது நம்மை இஸ்லாத்தின் மூன்றாவது அடிப்படைக்கோட்பாட்டிற்கு தானாகவே இட்டுச் சென்றுவிடுகின்றது. அந்தக் கொள்கை மரணத்திற்குப் பின் உள்ள மறுமை வாழ்வின் மீது நம்பிக்கை கொள்வதாகும்.

இஸ்லாமியக் கோட்பாட்டின்படி, இந்த உலகம் ஒரு சோதனைக் களமே! அந்த சோதனைக்களத்தில் மனிதன் புடம் போடப்பட்டு அவனுடைய தரம் இங்கே மதிப்பிடப்படுகின்றது!

இந்த உலகம் ஒரு நாள் நிச்சயமாக அழியப் போகின்றது. அதன் பின்னர் தோன்றும் ஒரு புதிய உலகமே மறுமை வாழ்வுக்கான நிரந்தர களமாகும். இந்த உலகில்தான் புரியும் அனைத்து செயல்களுக்கும் மனிதன் அந்த மறுமை உலகில் பதில் சொல்லியே ஆகவேண்டும். பூமியில் தான் செய்த செயல்களுக்கேற்ற நற்கூலியையோ அல்லது தண்டனையையோ இந்த மறுமை உலகில்தான் ஒவ்வொரு மனிதனும் பெற்றுக்கொள்வான்.

தமது இம்மை வாழ்வில் மேற்சொன்ன இறை வழிகாட்டுதல்களைப் பேணி வாழ்பவர்கள் மறுமையில் நிரந்தர சுவனப்பேற்றை அடைவார்கள். அன்றி, இறைவிருப்பத்துக்கு மாற்றமாக அவனது கட்டளைகளை அலட்சியப்படுத்தியவர்கள், இறைவனுக்கு நன்றி கொன்றவர்கள் மறுமை வாழ்வில் நரகவேதனையை அனுபவிப்பார்கள். இரண்டு விளைவுகளும் நிரந்தரமானவை என்பது குறிப்பிடத்தக்கது!

### இஸ்லாத்தின் எளிமையும் நடைமுறைக்கேற்ற அதன் அறிவுப்பூர்வமான அமைப்பு முறையும்

புராணங்கள், கட்டுக்கதைகள் ஏதுமில்லாத ஓர் வாழ்க்கைநெறியே இஸ்லாம்! அதன் அறிவுரைகள் எளிமையானவை; எளிதில் புரிந்துகொள்ளக் கூடியதும் பின்பற்றக்கூடியதும் ஆகும். அனைத்துவிதமான மூட நம்பிக்கைகளை விட்டும் தூய்மையானது. இஸ்லாத்தில் மதகுருமார்கள், தலைவர்கள் ஆதிக்கம் கிடையாது. மனிதத் தேவைகளுக்கும் நடைமுறைவாழ்வுக்கும் ஒத்துவராத பயனற்ற தத்துவங்களுக்கும் அதில் இடமில்லை. அறிவுக்கு எட்டாத சிக்கலான சடங்குகளுக்கும் கவைக்குதவாத சம்பிராதயங்களுக்கும் அதில் இடமில்லை. வல்ல இறைவனின் திருமறையை அணுகி அதிலிருந்து பயன்பெற முடியும்.

மனிதனுக்கு கிடைத்த அருட்கொடையான அவனது பகுத்தறிவை தட்டியெழுப்பி அவனது அறிவாற்றலைத் தூண்டுகின்றது. எந்தவொரு அம்சத்தையும் கண்மூடித்தனமாக ஏற்றுக்கொள்ளாமல், அதன் யதார்த்த நிலையின் ஒளியில், அதன் விரிவான பின்னணியில் பார்க்கும்படி - சிந்திக்கும்படி அது கட்டளையிடுகின்றது. அதற்கேற்றவாறு தனது அறிவைப் பெருக்க இறைவனிடம் பிரார்த்திக்கும்படி திருக் குர்ஆன் கூறுகின்றது:

*"என் இறைவனே! எனக்கு அதிகமான ஞானத்தை வழங்குவாயாக!"*

*திருக்குர்ஆன் 20:114*

மேலும், கூறுகின்றது:-

*"அறிந்தோரும் அறியாதோரும் சமமாக முடியுமா?"*

*திருக்குர்ஆன் 39:9*

சிந்திக்க மறுப்போரை

*...அவர்கள் மிருகங்களைப் போன்றவர்கள்; ஏன் அவற்றைவிடவும் தாழ்ந்தவர்கள்!.."*

*திருக்குர்ஆன் 7:179*

என்று இடித்துரைக்கின்றது!

*(நபியே!) நீர் கூறும்: "வேதம் அருளப்பட்டவர்களே! எங்களுக்கும் உங்களுக்கும் இடையிலுள்ள பொதுவான ஒரு விஷயத்தின் பக்கம் வாருங்கள்: அல்லாஹ்வைத் தவிர யாருக்கும் நாம் அடிபணிய மாட்டோம். அவனோடு எதனையும் எவரையும் நாம் இணையாக்க மாட்டோம். மேலும் நம்மில் எவரும் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரையும், இறைவனாய் ஆக்கிக் கொள்ளக்கூடாது !"*

*திருக்குர்ஆன் 3:64*

### உலகியலும் ஆன்மிகமும்: இஸ்லாத்தின் பார்வையில்!

இஸ்லாத்தின் தனித்தன்மை வாய்ந்ததொரு சிறப்பம்சம் என்னவெனில் அது மனித வாழ்வை உலகாயதம் சார்ந்தது - ஆன்மிகம் சார்ந்தது என்று இருவேறு கூறுகளாகப் பிரித்துப் பார்ப்பதில்லை. மாறாக, அது மனிதவாழ்வைப் பிரிக்க முடியாத ஒன்றாகவே கருதுகின்றது. துறவற வாழ்வை எந்நிலையிலும் அது ஆதரிக்கவில்லை. துறவு மனப்பான்மையை சரியானது என்று அது ஏற்றுக்கொள்வதில்லை. உலகப்பொருட்களை விட்டு ஒதுங்கி வாழும்படி அது மனிதனைக் கேட்பதில்லை.

மாறாக வாழ்க்கையை நிறைவுடையதாக்கிக் கொள்ளும்படி அது வலியுறுத்துகின்றது. கரடு முரடான, இன்னல்கள் நிறைந்த வாழ்க்கையிலும் இறையச்சத்துடன் வாழ்ந்து மறுமை வெற்றியை அடையலாம் என்று அது இயம்புகின்றது.

இதன் அடிப்படையில், இவ்வாறு பிரார்த்திக்கும்படி நமக்கு அறிவுறுத்துகின்றது:-

*"எங்கள் இறைவனே! இந்த உலகிலும் நன்மையை அருள்வாயாக; மறு உலகிலும் நன்மையை அருள்வாயாக !"*

*திருக்குர்ஆன் 2:201*

தான் வழங்கிய அருட்கொடைகளை ஏற்று அனுபவிக்க மறுப்பவர்களை இறைவன் இவ்வாறு கண்டிக்கின்றான்:-

*(முஹம்மதே! அவர்களிடம்) "நீர் கேட்பீராக! அல்லாஹ் தன் அடிமைகளுக்காகத் தோற்றுவித்துள்ள அலங்காரத்தையும் மேலும், அவன் வழங்கியுள்ள தூய்மையான உண்பொருள்களையும் தடை செய்தது யார்?..."*

*திருக்குர்ஆன் 7:32*

*...மேலும் உண்ணுங்கள், பருகுங்கள் ; ஆனால், வீண் விரயம் செய்யாதீர்கள்!..*

*திருக்குர்ஆன் 7:31*

உலகாயத வாழ்வு - ஒழுக்க வாழ்வு, ஆன்மிக வாழ்வு - துறவற வாழ்வு ஆகியவற்றுக்கு இடையே எவ்வித பிரிவினையையும் இஸ்லாம் ஏற்றுக்கொள்வதில்லை. அனுமதிப்பதும் இல்லை! தனது வாழ்வை ஆரோக்கியமான அடிப்படைகளின் மீது அமைத்துக்கொள்ள தன் ஆற்றல்கள், வலிமைகள் அனைத்தையும் அர்ப்பணித்திட வேண்டுமென்று அது மனிதனுக்கு ஆணையிடுகின்றது. ஒழுக்க சக்திகளும், ஆன்மிக சக்திகளும் ஒன்றோடொன்று இறுகப் பிணைக்கப் பயன்படுத்தி ஆன்மிக வெற்றியை அடைந்திட முடியுமே தவிர, துறவற வாழ்வின் மூலம் ஒரு மனிதன் வெற்றியை அடைந்திட இயலாது என அது அறிவுறுத்துகின்றது. மனிதவாழ்வின் இரு அம்சங்களான உலகாயதம், ஆன்மிகம் ஆகிய இரண்டுக்கும் இடையே ஒரு சமநிலையைத் தோற்றுவிப்பதையே இஸ்லாம் தனது குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

உலகின் அருள்வளங்கள் அனைத்தும் மனிதனுக்காகப் படைக்கப்பட்டுள்ளன. மனிதனோ, அவனைப் படைத்த இறைவனுக்காகப் படைக்கப்பட்டுள்ளான்! தன்னுடைய அதிபதியான அந்த ஏகஇறைவனின் விருப்பத்தை - கட்டளையை நிறைவேற்றுவதே மனித வாழ்வின் குறிக்கோளாகும். இஸ்லாத்தின் அறிவுரைகள் மனிதனின் ஆன்மிக மற்றும் உலகியல் தேவைகளை நிறைவு செய்கின்றன.

இஸ்லாம் மனிதனுக்கு இவ்வாறு கட்டளையிடுகின்றது:-

மனிதன் தனது ஆன்மாவைத் தூய்மைப்படுத்திக் கொள்ள வேண்டும். தனிப்பட்ட மற்றும் கூட்டுவாழ்வு ஆகிய இரண்டும் அடங்கிய தனது உலகியல் வாழ்வை சீர்த்திருத்திக்கொள்ள வேண்டும். அசத்தியத்தின் வலிமையை அடக்கி, நீதியை நிலைநாட்ட வேண்டும். தீமைகளை ஒழித்துக்கட்டி நற்பண்புகளை மலரச் செய்ய வெண்டும்.

இவ்வாறாக, அனைத்துவிதமான ஒருதலைப்பட்சமான தீவிரப்போக்குகளையும் தவிர்த்து நடுநிலையான பாதையைத் தேர்ந்தெடுத்து அதில் உறுதியாக நடைபோடச் செய்கின்றது, இஸ்லாம்!

### இஸ்லாம் : அது ஒரு முழுமையான வாழ்க்கைநெறி!

மதம்! - பொதுவாக இன்று தவறான, சிதைந்த கருத்தில் நோக்கப்படும் ஒரு அம்சம்!

ஆனால், இத்தகு ஒரு குறுகிய பொருளில், இஸ்லாம் ஒரு மதம் அல்ல! மதம் என்பது மனிதனின் தனிப்பட்ட வாழ்வுடன் தொடர்புடையது என்பதை அது ஒப்புக்கொள்வதில்லை! மாறாக, வாழ்வின் அனைத்து தளங்களிலும் பின்பற்றப்பட வேண்டிய - அனைத்துத் துறைகளையும் தழுவி நிற்க வேண்டிய ஒரு வாழ்க்கை நெறியாகும்.

இத்தகைய மாபெரும் தேட்டமே இஸ்லாம்!

மனிதனின் தனிப்பட்ட வாழ்வு, சமூகம் சார்ந்த கூட்டு வாழ்வு, உலகாயத வாழ்வு, ஒழுக்க ஆன்மிக வாழ்வு, அரசியல் வாழ்வு, பொருளாதார வாழ்வு ஆகிய அனைத்தையும் அது தன்னுள் கொண்டுள்ளது. சட்டம், பண்பாடு, தேசிய— சர்வதேச விவகாரங்கள் அனைத்தையுமே அது தழுவி நிற்கின்றது.

இஸ்லாத்தை மேற்கொள்ளும் ஒவ்வொருவர் மீதும் பின்வரும் அம்சங்களை திருக் குர்ஆன் கடமையாக்குகின்றது:-

இஸ்லாமிய அறிவுரைகளை எந்த ரூபத்திலும் கூறுபோட்டு ஒதுக்கிவிடக் கூடாது. மாறாக, வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் அதன் அறிவுரைகளை ஒரு மனத்துடன் பேணி நடக்க வேண்டும்.

"சமுதாயப் பண்பாட்டுத் துறைகளில் மதத்தை ஆதிக்கம் செலுத்த அனுமதிக்கக் கூடாது;அது மனிதனின் தனிப்பட்ட வாழ்க்கைக்குரியதாக மட்டுமே இருக்க வேண்டும் என்று உலகம் தீர்மானித்திருப்பது மிக்க துரதிருஷ்டவசமானது. கூட்டுவாழ்வின் மீதான தனது படியை தளர்த்திவிட்டு தனிப்பட்ட வாழ்வின் குறுகிய வட்டத்திற்குள் நவீனஉலகம் முடங்கிவிட்டதே அதன் வீழ்ச்சிக்கு வழிவகுத்த முக்கிய காரணியாகும்!